**செய்தி வெளியீடு எண்: 358** **நாள்: 04.06.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.6.2018) தலைமைச் செயலகத்தில், உள்துறை சார்பில் கோயம்புத்தூர் மாவட்டம், கோவைப்புதூரில் 2 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் 4–ஆம் அணி காவலர்களுக்கான பாளையம் மற்றும் ஆயுதக்கிடங்கு ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 77 கோடியே 76 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 283 காவலர் குடியிருப்புகள், 12 காவல் நிலையங்கள், 12 காவல் துறை கட்டடங்கள், மற்றும் நாட்ராம்பள்ளியில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, ஆவடியில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள காவலர் சமுதாய நலக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கோயம்புத்தூர் மாவட்டம், கோவைப்புதூரில் 2 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் 4–ஆம் அணி காவலர்களுக்கான பாளையம் (Barracks) மற்றும் ஆயுதக்கிடங்கு ஆகியவற்றை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பொது மக்களுக்கு உரிய நேரத்தில், அவசர அழைப்பிற்கான சேவைகளை வழங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக,

2012–13ஆம் ஆண்டு காவல் துறை மானிய கோரிக்கையில், ஒருங்கிணைந்த "மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு மையம் (State Police Master Control Room - SPMCR) அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, சென்னை எழும்பூரில் உள்ள பழைய காவல் ஆணையாளர் அலுவலகத்தில் 11 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இக்காவல் கட்டுப்பாட்டு மையமானது, தீயணைப்பு, மருத்துவத் துறை, இருப்புப்பாதை மற்றும் கடலோர காவல் படை போன்ற பல்வேறு துறை சார்ந்த அவசர கால கட்டுப்பாட்டு மையங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இத்துறைகளைச் சார்ந்த அழைப்புகளானது அந்தந்தத் துறையின் கட்டுப்பாட்டு அறைக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் வாயிலாக பொதுமக்களின் குறைகள் களையப்படும்.

மேலும், சென்னை மாநகர் – புதுப்பேட்டை குதிரைப்படை வளாகத்தில் 16 குடியிருப்புகள், நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் ஆயுதப்படை வளாகத்தில் 37 குடியிருப்புகள், திருநெல்வேலி மாவட்டம் – அம்பாசமுத்திரத்தில் 29 குடியிருப்புகள், விருதுநகர் மாவட்டம் – ஆமத்தூர் மற்றும் இராஜபாளையத்தில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் 11–ஆம் அணி காவலர்களுக்கான 201 குடியிருப்புகள், என மொத்தம் 32 கோடியே 56 லட்சத்து 41 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 283 காவலர் குடியிருப்புகள்;

சென்னை மாநகர் – நொளம்பூர், சங்கர்நகர், மணலி மற்றும் கிண்டி; கடலூர் மாவட்டம் – மந்தாரக்குப்பம்; தஞ்சாவூர் மாவட்டம் – திருக்காட்டுப்பள்ளி மற்றும் பேராவூரணி; திருவள்ளூர் மாவட்டம் – கவரப்பேட்டை மற்றும் வெள்ளவேடு; தேனி மாவட்டம் – ஹைவேவிஸ்; விழுப்புரம் மாவட்டம் – வரஞ்சரம் மற்றும் கரியலூர் ஆகிய இடங்களில் 9 கோடியே 68 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 காவல் நிலையங்கள்;

சென்னை மாநகர் – செங்குன்றத்தில் கட்டப்பட்டுள்ள காவலர்களுக்கான படை குடியிருப்பு; எழும்பூரில் காவலர்களுக்கான தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனை மற்றும் காவல்துறை இணை ஆணையர் (கிழக்கு) நிர்வாகக் கட்டடம்; கீழ்பாக்கத்தில்

காவலர்களுக்கான சமுதாய நலக்கூடம்; இராஜாஅண்ணாமலைபுரத்தில் மாநில குற்ற ஆவணக் காப்பகம்; கன்னியாகுமரி மாவட்டம் – நாகர்கோவிலில் ஆயுதக் கிடங்கு, தஞ்சாவூர் மாவட்டம் – தஞ்சாவூரில் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருச்சிராப்பள்ளியில் 5 காவல் உதவி ஆணையாளர்களுக்கான அலுவலகங்கள், என மொத்தம் 23 கோடியே 47 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 காவல் துறை கட்டடங்கள்;

வேலூர் மாவட்டம் – நாட்ராம்பள்ளியில் 61 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம்;

என மொத்தம், 80 கோடியே 56 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் திட்ட சேமிப்புகளிலிருந்து 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள காவலர் சமுதாய நலக் கூடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு மையத்தின் மூலமாக இயங்கக்கூடிய “KAVALAN Dial 100” அழைப்பு செயலி மற்றும் “KAVALAN SOS” அவசர பாதுகாப்புச் செயலி ஆகிய கைப்பேசி செயலிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்கள்.

“KAVALAN Dial 100” அழைப்பு செயலியை பொதுமக்கள் தங்கள் கைப்பேசியில் பதிவிறக்கம் செய்து கொண்டால், அவசர காலத்தில் “100” என்ற எண்ணை டயல் செய்யாமலேயே, இந்த செயலியை தொடுவதின் மூலம், நேரடியாக மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு அறையை தங்களுடைய இருப்பிட தகவல்களுடன் தொடர்பு கொள்ள இயலும்.

“KAVALAN SOS” அவசர பாதுகாப்புச் செயலியானது, பெண்கள் மற்றும் மூத்த குடிமக்களின் பாதுகாப்பிற்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்டது. இந்த செயலியை

பெண்கள் மற்றும் மூத்த குடிமக்கள் தங்கள் கைப்பேசியில் பதிவிறக்கம் செய்து கொண்டால், அவசரத் தேவையின் போது, அந்த கைப்பேசியை அதிரச் செய்தாலே, உடனடியாக அவர்களுடைய இருப்பிடத் தகவல் மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு அறைக்கும் மற்றும் அவர்கள் "KAVALAN SOS" செயலியில் பதிவு செய்துள்ள மூன்று உறவினர்கள் / நண்பர்கள் எண்ணிற்கு இருப்பிடத் தகவலுடன் எச்சரிக்கை குறுஞ்செய்தியும் அனுப்பப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர். நடராஜ், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் முனைவர் அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் திரு.கே.பி. மகேந்திரன், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. ந. தமிழ்செல்வன், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 4.6.2018**